# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1986 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டம்

---

*[1986, செப்ரெம்பர் மாதம் 05 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---


1986, செப்ரெம்பர் மாதம் 05 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 75

## 1986 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க உண்ணுட்டரசிறை (திருத்தம்) சட்டம்

[1986 செப்ரெம்பர் 5 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.இ. 12/86.

### 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்திஞல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1986 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச சட்டத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்தல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பந்தியின் (xLviii) என்னும் உட்பந்தியில், "மா "கொழும்புப் பொருளாதார ஆணைக் குழுவின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மாகொழும்புப் பொருளாதார ஆணைக் குழுவின் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் இறுதியில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்

" (xLix) 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சனுதிபதி நிதியச் சட்டத்திஞல் தாபிக்கப்பட்ட சனுதிபதி நிதியத்தின் ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (த) என்னும் பந்தியில் "இலாபங்களும் வருமானமும்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "இலாபங்களும் வருமானமும் ;" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் இறுதியில் பின்வருவதனைச் சேர்ப்பதன், மூலமும் :—

" (ந) 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சனுதிபதி நிதியச் சட்டத்திஞல் தாபிக்கப்பட்ட சனுதிபதி நிதியத்திலிருந்து ஆளொருவரால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு, அப்பிரிவின் (த) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (தத) 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சனுதிபதி நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட சனுதிபதி நிதியம்; ".

2—எ 090526—2,950 (05/86)

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "அரசாங்கத்திற்கு அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார சபைக்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "அரசாங்கத்திற்கு அல்லது 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சனாதிபதி நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியத்திற்கு அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபைக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*எதிர்காலத்தை உள்ளடக்கும் பயன்.*

6. இச்சட்டத்தின் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் 5 ஆம் பிரிவுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், எல்லா நோக்கங்களுக்காகவும், முதன்மைச் சட்டவாக்கம் நடைமுறைக்கு வந்த தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*